அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் ; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவானதாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) போத்தல- மீபாவல ஸ்ரீ சுதர்ஷனாராம விகாரை அதிகார எல்லைக்கு முன்னுரிமை அளித்து தேர்ந் தெடுக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நிலையான வதிவிடத்தைக் கொண்ட குறைவருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து கல்வி ஊக்கமுள்ள, செயல்நுணுக்கமுள்ள சிறார்களை இனம் கண்டு அவர்களை விசேடமாக இலக்காகக் கொண்டு வருடாந்த புலமைப் பரிசில்களை வழங்குதல் ;

(ஆ) பௌத்த கல்வி மற்றும் பௌத்த கலாசார விழுமியங்களை போசிப்பதன்வேண்டி அதற்கு உதவிக்கரம் நீட்டுமுகமாக அனைத்து புலமைப்பரிசில்தாரிகளும் கட்டாயமாக ஏதேனுமொரு தர்மபாடசாலையில் கல்வியில் வேண்டுமென அடிப்படை நிபந்தனையொன்றாக கொள்ளல் ;

(இ) பெற்றோர் இருவரையும் இழந்த அல்லது வலது குறைந்த பெற்றோர்களது சிறுவர்கள் இருப்பின் அவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி அவர்களுக்கு வருடாந்த புலமைப்பரிசில்களை வழங்குதல் ; அத்துடன்

(ஈ) மதகுருமார்கள், ஆசிரியர்கள் ஆகியோரை மதித்தல் மற்றும் பெற்றோர்களை, முதியவர்களை ஆதரவளித்தல் போன்ற நற்பண்புகள் பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுதலினூடாக சமூகத்திலிருந்து ஒழிந்து கொண்டுபோகும் நற்பண்புகளை பாதுகாத்தல்.

